# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

புதன்கிழமை 27.10.2021 | supeedsam.com | supeedsam@gmail.com





# யாரையும் காட்டிக்கொடுப்பதோ பழிவாங்குவதோ எங்களது நோக்கம் இல்லை

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(குகதர்சன்)

யாரையும் காட்டிக்கொடுப்பதோ பழிவாங்குவதோ எங்களது நோக்கம் இல்லை,இருக்கிறதை பாதுகாத்துக்கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்பதே எமது நோக்கம் என மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

13வது திருத்த சட்டத்தினை அமுல்படுத்தவேண்டும் என்னை துரோகியாக்கிய தமிழ் தேசிய கூட்டமைப்பு இன்று அந்த

02 ஆம் பக்கத்தில்...

## இரசாயன உரம் பெற்றுத் தருமாறு கோரி சம்மாந்துறையில் போராட்ட ஊர்வலம்




(நூருள் ஹுதா உமர்)

விவசாயிகள், விவசாய அமைப்புகள் மற்றும் பொதுமக்களின் பங்களிப்புடன் ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் எம்.ஏ.ஹசன் அலி

02 ஆம் பக்கத்தில்...

## மட்டு.கல்முனை வீதியில் பாரிய விபத்து: 6 வாகனங்கள் பெரும் சேதம்





(ஜவ்பர்கான்)

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் காத்தான்குடி பொலிஸ் பிரலிவிலுள்ள காத்தான்குடி பிரதான வீதியில் நேற்று செவ்வாய்கிழமை நண்பகல் இடம் பெற்ற வாகன விபத்தில் ஒரு லொறி உட்பட ஒரு முச்சக்கர வண்டி,

02 ஆம் பக்கத்தில்...

## பாதிக்கப்பட்ட ஒய்வூதியர்களின் வழக்கு 1 ஆம் திகதி விசாரணைக்கு வருகிறது

### பாதிக்கப்பட்டோரில் 1900 பேர் இறப்பு



(அஸ்லம் எஸ்.மௌலானா)

2016 ஆம் ஆண்டு முதல் 2019 வரை அரசாங்க சேவையில் இருந்து ஒய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கு மறுக்கப்பட்ட ஒய்வூதிய அதிகரிப்பை வழங்க உத்தரவிடுமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஒய்வூதியர்களின் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய இயக்கம் தாக்கல் செய்த வழக்கு எதிர்வரும் நவம்பர் ஆம் திகதி

02 ஆம் பக்கத்தில்...

## யானைகளின் அச்சுறுத்தலினால் திணறும் அம்பாறை யானை வேலியமைத்தல் தொடர்பில் கூடியது உயர்மட்டம்!



(மாளிகைக்காடு நிருபர், சகா, நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்தியத்தில் அண்மைக்காலங்களில் அதிகரித்துவரும் யானைகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தி பொது மக்களின் உடமைகளையும், சொத்துக்களையும் பாதுகாக்கும் நோக்கில் யானைவேலி அமைத்தல் தொடர்பில் வனஜீவராசிகள்

02 ஆம் பக்கத்தில்...

## எங்கள் மண் வளத்தையும் கடல் வளத்தையும் அழிப்பதை பார்த்துக் கோண்டிருக்க முடியாது

ஒரு சிலர் வாழ்வதற்காக எங்கள் மண் வளத்தையும் கடல் வளத்தையும் அழிப்பதை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. உருவ பொம்மை என்ன எங்களை சுட்டுப் போட்டாலும் எங்கள் வளங்களை அழிப்பவர்களிற்கு எதிராக போராடுவோம் என முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ச.சுகிர்தன் தெரிவித்தார்.

வடக்கில் றோலர் தொழில் செய்யும் பலர் அரச உத்தியோகத்தர்களாகவும் வேறு தொழில் முயற்சியில் ஈடுபடுபவர்களே. தொடர்சியாக கடல் தொழிலில் ஈடுபடும்

02 ஆம் பக்கத்தில்...

## இலங்கையில் 60 வீதமானவர்களுக்கு போசாக்கான உணவுகள் கிடைப்பதில்லை

### வெளியான அதிர்ச்சி தகவல்

(காந்தன்)

இலங்கையில் சுமார் 60 வீதமானவர்களுக்கு போசாக்கான உணவுகள் கிடைப்பதில்லை என உணவு உரிமை தொடர்பில் கண்காணிக்கும் தேசிய நிறுவனம் தெரிவித்துள்ளது.

கருத்துக் கணிப்பு ஒன்றின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

## கட்சி முடிவெடுத்தால் பதவிகளை துறக்க தயார்



(தர்மா)

அரசாங்கத்தில் இருந்து வெளியேறுவதற்கு கட்சி முடிவெடுத்தால் பதவிகளை துறந்துவிட்டு நாளையே வெளியேறுவதற்குத் தயாராக இருப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

## மீன்பிடி படகுகளுக்கான எரிபொருள் நிரப்பு நிலையம் ஐஸ் உற்பத்தி தொழிற்சாலை ஆகியவை திறந்து வைப்பு



(ஏறாவூர் நிருபர் நாஸர்)

கடந்த நல்லாட்சி காலத்தில் மூடப்பட்டிருந்த ஏறாவூர்ப்பற்று களுவன்கேணி கடற்கரை பிரதேசத்தின் மீன்பிடி படகுகளுக்கான எரிபொருள் நிரப்பு நிலையம் மற்றும் ஐஸ் உற்பத்தி

02 ஆம் பக்கத்தில்...

## அரசானது தனது பிடிவாதத்தை கைவிட்டு விவசாயிகளின் கோரிக்கைக்கு செவிமடுக்க வேண்டும்



(வாஸ் கூஞ்ஞ)

இந்த அரசானது விவசாயிகளை கைநெகிழுமாகில் இந்த நாடு பெரும் பஞ்சத்துக்கு உள்ளாக நேரிடும். ஆகவே அரசானது தனது பிடிவாதத்தை கைவிட்டு விவசாயிகளின் கோரிக்கைக்கு செவிமடுக்க வேண்டும் என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினி வேண்டி மன்னார்

02 ஆம் பக்கத்தில்...




## ஓட்டமாவடி மாஞ்சோலை அல் ஹிரா வித்தியாலய காணிக்கு எதிராக செய்யப்பட மேன்முறையீடு நிராகரிப்பு







(எச்.எம்.எம்.பர்ஸான்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட மாஞ்சோலை அல் ஹிரா வித்தியாலய காணிக்கு எதிராகா செய்யப்பட மேன்முறையீடு மட்டக்களப்பு மாவட்ட சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றதினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...






## ஓட்டமாவடி மாஞ்சோலை அல் ஹிரா வித்தியாலய

தனது காணியை பாடசாலை நிருவாகம் அத்துமீறி பிடித்திருப்பதாக சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நபர் ஒருவர் தாக்கல் செய்த மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டு பாடசாலை சார்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

ஆரம்பத்தில் வாழைச்சேனை நீதிமன்றத்தில் தொடரப்பட்டு வந்த இவ் வழக்கை வாழைச்சேனை நீதிமன்றம் 2018 ஆம் ஆண்டு 11 ஆம் மாதம் 13 ஆம் திகதி விசாரணை செய்து காணி பாடசாலைக்கு சொந்தமென்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

தீர்ப்பினை ஏற்றுக்கொள்ளாத வழக்காளி அத்தீர்ப்பிற்கு எதிராக சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீட்டினை செய்திருந்தார். இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்ட சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடரப்பட்டு வந்த வழக்கினை பாடசாலை சார்பாக ஆஜரான சட்டத்தரணிகளின் வாதங்களை ஏற்றுக்கொண்ட மட்டக்களப்பு மாவட்ட சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழக்காளியினால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டினை நிராகரித்ததுடன் காணி பாடசாலைக்கு உரியது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பதினொரு வருடங்களாக இடம்பெற்று வந்த இவ் வழக்கு முடிவுக்கு வந்துள்ளமைக்காக சட்டத்தரணி ஹபீப் றிபானுக்கு பாடசாலையின் அதிபர் எம்.ஏ.சீ. ஜிப்ரி கரீம் நன்றிகளை தெரிவித்துள்ளார். அத்துடன் சட்டத்தரணி ஹபீப் றிபாவின் நெருக்கத்தை பயன் படுத்து இவ் வழக்கில் எவ்வித கட்டணங்களையும் பெறாமல் வழக்காடிய சிரேஸ்ட சட்டத்தரணி ஆரிப் சம்சுதீனுக்கும் நன்றிகளை தெரிவிப்பதாக அதிபர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், அரச சட்டத்தரணியாக குறித்த வழக்கில் ஆஜரான சட்டத்தரணி எம்.எம்.எம்.ராசிக் மற்றும் வழக்கினை தொடர நிதியுதவி மற்றும் ஆதரவுகளை வழங்கிய மாஞ்சோலை ஹிழுரியா நிர்வாகம், பாடசாலை அபிவிருத்தி சங்கம், பிரதேச அமைப்புக்கள் அத்தனைக்கும் நன்றிகளை தெரிவிப்பதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

## மீன்பிடி படகுகளுக்கான எரிபொருள் நிரப்பு நிலையம்

தொழிற்சாலை ஆகியவற்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திறந்து வைத்தார்.

களுவன்கேணி பிரதேசத்தில் மீன்பிடியை வாழ்வாதாரமாகக் கொண்ட சுமார் அறுநூறு குடும்பங்கள் வாழ்கின்றன.சுமார் இருநூறு மீனவப்படகுகள் உள்ளதாக கடற்றொழில் அலுவலர் த. முகுந்தன் தெரிவித்தார்.

கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் றுக்ஷான் குறூஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் உள்ளிட்ட பலர்கலந்து கொண்டனர்.

களுவன்கேணி பிரதேசத்து மீனவ எரிபொருள் நிரப்பு நிலையம் மற்றும் ஐஸ் உற்பத்தி தொழிற்சாலை ஆகியன கடந்த நல்லாட்சி காலத்தில் மூடப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்டுகிறது. இதனால் மீனவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கிவந்தனர்.

## அரசானது தனது பிழவாதத்தை கைவிட்டு விவசாயிகளின்

மாவட்டத்தின் 174 கமநல சேவை விவசாய அமைப்புக்கள் ஒன்றிணைந்து மன்னார் விவசாய சம்மேளனத்தின் தலைமையில் உயிலங்குளம் பகுதியில் மாபெரும் கவனயீர்ப்பு போரட்டம் ஒன்றை திங்கள் கிழமை மேற்கொண்டனர்.

இதன்போது வன்னி பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் இவ் போராட்டத்தில் கலந்து கொண்டு இங்கு உரையாற்றும்போது தொடர்ந்து தெரிவிக்கையில்

மன்னார் மாவட்ட விவசாயிகள் ஒன்று திரண்டு இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினி வேண்டி போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இவர்களுடைய போராட்டத்தில் நாங்களும் இவர்களுடன் முழுமையாக இணைந்துள்ளோம்.

இவ் பிரச்சனை மன்னார் மாவட்ட விவசாயிகளுக்கு மட்டுமல்ல இந்த நாடு முழுவதும் இவ் உரப் பிரச்சனை பாரிய பிரச்சனையாக இருக்கின்றது.

விவசாயிகளை கைவிட்டால் இந்த நாடு பெரியதொரு வறுமைக்கு தள்ளப்பட்டு விடும்.

அரசானது இந்த உரப் பிரச்சனையை விட்டுக்கொடுக்காத நிலையில் அவர்கள் தன்னிச்சையான செயல்பாட்டில் இருந்து வருகின்றனர்.

ஒரு இராணுவ வீரனாக இருந்தவருக்கு விவசாயத்தின் அருமை தெரியாத நிலையே இங்கு காணப்படுகின்றது.

ஆகவே அரசானது உரத்தை இறக்குமதி செய்து விவசாயிகளின் போராட்டத்தை நிறுத்துவதற்கான செயல்பாட்டில் இறங்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் அரசுக்கு கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

மன்னார் மாவட்டத்திலுள்ள விவசாய நிலம் சேதன பசளைக்கு இடம்கொடுக்காத நிலை காணப்படுவதால் திடீரென சேதன பசளைக்கு இங்குள்ள நிலத்தை மாற்றுவது ஒரு கடினமான செயல்பாடாகும்.

ஆகவே விவசாயிகள் இவ் நிலத்தை சேதன பசளைக்கு ஏற்ப இவ் நிலத்தை பக்குவப்படுத்தும் வரைக்கும் விவசாயிகளுக்கு இரசாயன பசளையை இந்த நேரத்தில் வழங்க வேண்டு;ம் என நாம் இங்கு கோரி நிற்கின்றோம் என இவ்வாறு தெரிவித்தார்.

## யாரையும் காட்டிக்கொடுப்பதோ பழிவாங்குவதோ எங்களது

சட்டத்தினை கோரி நிற்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மீன்பிடியாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் ஆராயும் வகையிலும் எதிர்காலத்தில் வாகரையில் மீன்பிடி தொடர்பில் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயும் வகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்டார்.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பிரும் மாவட்ட அபிவிருத்திக்குழுவின்இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் ஆகியோரின் அழைப்பினையேற்று இன்று விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது வாகரை மீன்பிடி திணைக்கள காரியாலய வளாகத்திற்கு சென்ற அமைச்சர் அங்கு விசேட சந்திப்பில் மீனவர்களுடன் கலந்துகொண்டார்.

இந்த சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பிரும் மாவட்ட அபிவிருத்திக்குழுவின்இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்,மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது வாகரை பிரதேசத்தில் மீன்பிடியாளர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்துகொண்ட அமைச்சர் முக்கியமாக வாகரை பிரதேசத்தில் மீன்பிடி துறைமுகம் ஒன்றினை அமைப்பது குறித்து ஆராயப்பட்டது.

அத்துடன் வாகரை பிரதேசத்தில் மீன்பிடி நடவடிக்கைகளை மேம்படுத்தி இங்கிருந்து தனித்துவமான மீன்ஏற்றுமதிகளை முன்னெடுப்பது குறித்தும் ஆராயப்பட்டது.

வாகரை பிரதேச மக்களின் வாழ்வாதாரத்திடி உயர்த்துவதற்கு விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதன்போது தெரிவித்தார்.

யாரையும் காட்டிக்கொடுப்பதோ பழிவாங்குவதோ எங்களது நோக்கம் இல்லை,இருக்கிறதை பாதுகாத்துக் கொண்டு முன்னோக்கிச்செல்வேண்டும் என்பதே எமது நோக்கம் என மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். 13வது திருத்த சட்டத்தினை அமுல்படுத்தவேண்டும் என்னை துரோகியாக்கிய தமிழ் தேசிய கூட்டமைப்பு இன்று அந்த சட்டத்தினை கோரி நிற்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மீன்பிடியாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும்ஆராயும் வகையிலும் எதிர்காலத்தில் வாகரையில் மீன்பிடி தொடர்பில் முன்னெடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயும் வகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இன்று மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்டார்.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பிரும் மாவட்ட அபிவிருத்திக்குழுவின்இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் ஆகியோரின் அழைப்பினையேற்று இன்று விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது வாகரை மீன்பிடி திணைக்கள காரியாலய வளாகத்திற்கு சென்ற அமைச்சர் அங்கு விசேட சந்திப்பில் மீனவர்களுடன் கலந்துகொண்டார்.

இந்த சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பிரும் மாவட்ட அபிவிருத்திக்குழுவின்இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்,மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது வாகரை பிரதேசத்தில் மீன்பிடியாளர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்துகொண்ட அமைச்சர் முக்கியமாக வாகரை பிரதேசத்தில் மீன்பிடி துறைமுகம் ஒன்றினை அமைப்பது குறித்து ஆராயப்பட்டது.

அத்துடன் வாகரை பிரதேசத்தில் மீன்பிடி நடவடிக்கைகளை மேம்படுத்தி இங்கிருந்து தனித்துவமான மீன்ஏற்றுமதிகளை முன்னெடுப்பது குறித்தும் ஆராயப்பட்டது.

வாகரை பிரதேச மக்களின் வாழ்வாதாரத்திடி உயர்த்துவதற்கு விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதன்போது தெரிவித்தார்.







## மட்டு.கல்முனை வீதியில் பாரிய விபத்து;

நான்கு மோட்டார் சைக்கிள்கள் என்பன சேதமடைந்துள்ளன.

மட்டக்களப்பிலிருந்து வந்த சிறிய லொறியொன்று காத்தான்குடி மட்டக்களப்பு பிரதான வீதியிலுள்ள எல்லையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டி மற்றும் நான்கு மோட்டார் சைக்கிள் என்பவற்றுடன் மோதியுள்ளது.

இதில் குறித்த லொறி உட்பட முச்சக்கர வண்டி என்பன சேதமடைந்துள்ளதுடன் மோட்டார நான்கு மோட்டார் சைக்கிளும் சேதமடைந்துள்ளன. குறித்த லொறி முச்சக்கர வண்டியில் மோதுண்டதுள்ளதுடன் அவ்விடத்திலுள்ள மர ஆலையொன்றுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது. அவ்விடத்திலுள்ள வீதி ஓரத்தில் நின்ற மரமொன்றுடனும் இந்த லொறி மோதியதில் மரத்துக்கும் சிறிய சேதம் ஏற்பட்டுள்ளது.

எனினும் இச்சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லையென காத்தான்குடி பொலிசார் தெரிவித்தனர். சம்பவ இடத்துக்கு வந்த காத்தான்குடி பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் வாகனங்களை அப்புறப்படுத்தி போக்குவரத்தை சீர் செய்தனர்.

## கட்சி முடிவெடுத்தால் பதவிகளை துறக்க தயார்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசிலிருந்து வெளியேற வேண்டும் என பலரும் கருத்துகளை தெரிவித்துவரும் நிலையிலேயே அக்கட்சியின் உப தலைவரும், அமைச்சருமான மஹிந்த அமரவீர இதனைத் தெரிவித்தார்.

உரப்பிரச்சினை மற்றும் அதிபர், ஆசிரியர்களின் போராட்டம் ஆகியன தொடர்பாக தாம் விமர்சனங்களை முன்வைத்துவரும் நிலையில் அரசாங்கத்தில் இருந்து வெளியேறும்படி ஒருசில தரப்பினர் வலியுறுத்தி வருவதாகவும் மஹிந்த அமரவீர கூறினார்.

கட்சி ஒருமனதாக தீர்மானித்தால் நாளையே பதவிகளை துறந்துவிட்டு வெளியேறுவதற்கு தயாராக இருப்பதாக தெரிவித்த மஹிந்த அமரவீர, எனினும் அத்தகையதொரு முடிவை கட்சி இன்னும் எடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தில் இருந்து வெளியேறினால் கைப்பாவையாக இருக்கும் சஜித் பிரேமதசாவை ஜனாதிபதி ஆக்க முடியுமா அல்லது தோல்வியடைந்த தலைவரான ரணிலை மீண்டும் பலப்படுத்துவதா என்ற பிரச்சினை காணப்படுவதாகவும் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

## யானைகளின் அச்சுறுத்தலினால் திணறும் அம்பாறை

வளங்கள் இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்கவுக்கு திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் விளக்கமளித்து உடனடியாக அந்த வேலிகளை அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

அம்பாறை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் வனஜீவராசிகள் வளங்கள் இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்கவின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது சம்மாந்துறை, மாவடிப்பள்ளி, சாய்ந்தமருது பொலிவேரியன் சுனாமி வீட்டுத் திட்டம், கல்முனை கிரீன் பீல்ட் சுனாமி வீட்டுத்திட்டம், மருதமுனை பிரான்ஸ் சிட்டி சுனாமி வீட்டுத் திட்டம், குடுவில், வாங்காமம், நற்பிட்டிமுனை ஆகிய பிரதேசங்கள் அடங்களாக அம்பாறையின் ஏனைய பிரதேசங்களில் யானையின் கெடுபிடி அதிகமாக உள்ளதையும், இதனால் பொதுமக்களின் அன்றாட இரவுவேளை பீதியில் உள்ளதையும் எடுத்துரைத்த திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் உடனடியாக மக்களின் உயிரையும், உடமைகளையும் பாதுகாக்க வேண்டி மிக அவசரமாக யானை வேலிகளை அமைக்குமாறு இராஜாங்க அமைச்சரை கேட்டுக்கொண்டார்.

இந்த கலந்துரையாடலில் வனஜீவராசிகள் வளங்கள் இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப், டாக்டர் திலக் ராஜபக்ஸ, மாவட்ட அபிவிருத்தி குழுத்தலைவர் டீ. வீரசிங்க, அம்பாறை அரசாங்க அதிபர், சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.எம். நௌஸாத், இறக்காமம் பிரதேச சபை தவிசாளர் ஜெமீல் காரியப்பர், அம்பாறை பிரதேச செயலாளர் அடங்களாக உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், இராஜாங்க அமைச்சின் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

## எங்கள் மண் வளத்தையும் கடல் வளத்தையும்

ஒரு சிலரே றோலர் வைத்துள்ளார்கள்.

அவர்கள் தங்கள் குடும்பத்தை போலவே கடலையும் நேசிப்பவர்கள். ஆனால் கடலை கொள்ளையடிக்க முதலீடு செய்தவர்கள் எந்த எல்லைக்கும் போவார்கள். அவர்களை கண்டு நாங்கள் பயப்படபோவதும் இல்லை.

ஒரு சிலர் வாழ்வதற்காக எங்கள் மண் வளத்தையும் கடல் வளத்தையும் அழிப்பதை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. உருவப் பொம்மை என்ன எங்களை சுட்டுப் போட்டாலும் எங்கள் வளங்களை அழிப்பவர்களிற்கு எதிராக போராடுவோம்.

குடத்தனையில் மணல் கொள்ளைக்கு எதிராக போராடிய நண்பன் கேதீஸை சுட்டுக் கொன்றதனை மறக்கவும் இல்லை அதற்கு பயந்து மணல் கொள்ளையைத் தடுத்து நிறுத்தாமல் பயந்து ஒதுங்கவும் இல்லை. ஆகவே எங்கள் போராட்டம் தொடரும் என சுகிர்தன் மேலும் தெரிவித்துள்ளார்.

## இலங்கையில் 60 வீதமானவர்களுக்கு போசாக்கான

கொவிட் பெருந்தொற்று பரவுகையின் பின்னர் இவ்வாறு போசாக்கான உணவுகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாட்டின் பத்து மாவட்டங்களில் இந்த கருத்துக் கணிப்பு நடாத்தப்பட்டுள்ளது.

கொழும்பு, யாழ்ப்பாணம், புத்தளம், கம்பஹா, களுத்துறை, காலி, மட்டக்களப்பு, கண்டி, நுவரெலியா மற்றும் பதுளை உள்ளிட்ட மாவட்டங்களில் இந்த கருத்துக் கணிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கருத்துக் கணிப்பில் பங்கு பற்றியவர்களில் %1 வீதமான குறைந்த விலையில் உணவுப் பொருட்கள் கொள்வனவு செய்துள்ளனர் எனவும், 69 வீதமானவர்கள் வாரமொன்றில் ஐந்து நேரம் உணவு உட்கொள்ளவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

இவ்வாறு கருத்துக் கணிப்பில் பங்கேற்றவர்களில் 14 வீதமானவர்கள் வாரமொன்றில் ஒன்று அல்லது இரண்டு நாட்கள் ஒருவேளை உணவையேனும் பெற்றுக்கொண்டதில்லை என கருத்துக் கணிப்பு மூலம் தெரியவந்துள்ளது.

## பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்களின் வழக்கு; 1 ஆம் திகதி

விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளதாக அதன் உப தலைவரும் ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளருமான ஏ.எல்.முகம்மட் முக்தார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த வருடம் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு கொவிட் அசாதாரண சூழ்நிலை காரணமாக நீதிமன்ற நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால் நீதிமன்றில் சமர்ப்பணத்துக்காக எடுக்கப்படாமல் தள்ளி வைக்கப்பட்டிருந்தது.

இவ்வழக்கை இந்த அமைப்பு சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி சுனில் வட்டகல மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தார். இவ்வழக்கின் பிரதிவாதிகளாக அமைச்சரவை அமைச்சர்கள் சிலர், பொதுநிருவாக அமைச்சின் செயலாளர், நிதி அமைச்சின் செயலாளர், ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் உள்ளிட்டோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

நல்லாட்சி அரசாங்கத்தில் 2016 ஆம் ஆண்டு அதிகரிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கான சம்பளம் 2016 முதல் 2020 வரை 05 கட்டங்களாக வழங்கப்பட்டது. இதில் 2016 முதல் 2019 வரை ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கு 2020 ஆம் ஆண்டு வழங்கப்பட வேண்டிய அடிப்படை சம்பளத்திற்கு ஏற்றவாறு ஓய்வூதியத்தை கணிப்பிட்டு வழங்குமாறு பொது நிருவாக அமைச்சு 35/2019 ஆம் இலக்க சுற்று நிருபம் வெளியிடப்பட்டிருந்தது. எனினும் 2019 ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் வந்த புதிய அரசு அக்கொடுப்பனவை நிறுத்தியிருந்தது. இதன் காரணமாக சுமார் 120,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் இதுவரை நாட்டின் பல பாகங்களைச் சேர்ந்த சுமார் 1900 ஓய்வூதியர்கள் மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த அநீதிக்கு எதிராக பல்வேறு ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் நடாத்தப்பட்டன. ஜனாதிபதி, பிரதமர், நிதி அமைச்சர், ஜனாதிபதி ஆகியோரைச் சந்திப்பதற்கு அவகாசம் தருமாறு கோரியிருந்தும் அதற்கான அவகாசம் வழங்கப்படவும் இல்லை. இந்நிலையில் நீதிமன்றத்தின் மூலம் சாதகமான தீர்வை எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

## இரசாயன உரம் பெற்றுத் தருமாறு கோரி

யின் தலைமையில் யூரியா இரசாயன உரம் பெற்றுத் தருமாறும் அதிகரிக்கப்பட்ட பொருட்களுக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்குமாறும் வலியுறுத்தி போராட்ட ஊர்வலம் சம்மாந்துறையில் இடம்பெற்றது. சம்மாந்துறை விளினையடி சந்தியில் ஆரம்பித்த இந்தப் போராட்டம் நடைபவனியாக ஹிஜ்ரா சந்தி ஊடாக சுமார் இரண்டு கிலோமீட்டர் நடைபவனியாக சென்று சம்மாந்துறை பிரதேச செயலகம் வரை சென்றது. இதன்போது பட்டம்பிட்டி வயல் பிரிவு குழுத்தலைவர் மற்றும் ப்ளாக் ஜே வயல் பிரிவு குழுத்தலைவர் ஆகியோரால் சம்மாந்துறை பிரதேச செயலாளர் ஊடாக ஜனாதிபதிக்கும் அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபருக்கும் மகஜர் சமர்ப்பிக்கப்பட்டது. இதன்போது மகஜரில் உள்ள விடயங்கள் வாய்மொழிந்தும் காட்டப்பட்டது. இந்த மகஜரில் விவசாயிகளின் அடிப்படை தேவையான இரசாயன உரத்தினை பெற்றுத்தருமாறு குறித்த அதிகாரிகளுக்கு எழுத்து மூலம் குறிப்பிடப்பட்டிருந்தது

இந்த நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் எம்.ஏ. ஹஸன் அலி, முன்னாள் திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் தற்போதைய மாகாணசபை தவிசாளர் சந்திரதாச களபதியும், ஓய்வுபெற்ற மாவட்ட சிறுவர் நன்னடத்தை அதிகாரியும் வயல் பிரிவு குழுத்தலைவருமான உதுமாலெப்பை பலரும் கலந்துகொண்டனர்.

# ஆரையம்பதி அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலைய மஹா கும்பாபிகே விஞ்ஞாபனம்





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு ஆரையம்பதி மாவிலங்கத்துறை அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய புனராவர்த்தன அநு;டபந்தன மஹா கும்பாபிஷேகம் விஞ்ஞாபன கியைகள் 23ம் திகதி ஆரம்பமாகி 25 ஆம் திகதி மஹா கும்பாபிஷேகம் விஞ்ஞாபன பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

எண்ணெய்க் காப்பு கடந்த 24ம் திகதி ஞாயிற்று கிழமை %.00 மணி முதல் 5.00 மணிவரை சிறப்பாக நடைபெற்றது.

நேற்று முதல் மண்டலாஷேகம் 17 ம் கார்த்திகை மாதம் 1008 சங்காபிஷேகத்துடன் கியைகள் யாவும் நிறைவுபெறும்

நடைபெறுகின்ற கிரியாகால பிரதம குருவாக சிவஸ்ரீ மு.கு.சச்சிதானந்த மூர்த்தி குருக்கள் (கொக்கட்டிச்சோலை தான்தோன்றிஸ்வர ஆலயம்) மற்றும் பிரதிஷ்டா குருமார்களாக சிவஸ்ரீ வ.சோதிலிங்கக் குருக்கள் சிவஸ்ரீ கருனாகர குருக்கள் சிவஸ்ரீ மு.கு.சபாரெத்தினக் குருக்கள் சிவஸ்ரீ நவரத்தின முரசொலி மாறக் குருக்கள் ஆகியோருடன் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ க.கண்ணன் சர்மா மற்றும் பலரின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது.

அட்டபந்தன மஹா கும்பாபிஷேக நிகழ்வில் ஆரையம்பதி மாவிலங்கத்துறை பக்தர்கள் பக்த்தி பூர்வமாக கலந்துகொண்டு இறைவனின் திருக்கடாட்சம் வேண்டி வழிபட்டதுடன் அங்கு இடம்பெற்ற அன்னதான நிகழ்வுகளிலும் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பில் இடம்பெற்ற உலக நீச்சல் தின நிகழ்வு

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)






உலக நீச்சல் தினத்தினை முன்னிட்டு கொரோனா அச்சுறுத்தலால் வீழ்ந்துள்ள சுற்றுலாத்துறையினை எழுச்சிபெறச்செய்யும் வகையில் உலக நீச்சல் தின நிகழ்வு மட்டக்களப்பில் அனுஸ்டிக்கப்பட்டது.

இதனை முன்னிட்டு விசேட நிகழ்வு மட்டக்களப்பு கல்லடி கடற்கரையில் நடைபெற்றது.

சுற்றுலாப்பயணிகளைகவரும் கொரோனாவினால் உளவளத்தினை மேம்படுத்தும் வகையிலும் மட்டக்களப்பு நீச்சல் கல்லூரியினால் ஆறு மாணவர்கள் கலந்துகொள்ளும் கடலில் ஒரு கிலோமீற்றர் நீளம் நீந்தும் நிகழ்வு நடாத்தப்பட்டது.

மட்டக்களப்பு நீச்சல் கல்லூரியின் பொறுப்பாளரும் மட்டக்களப்பு மாவட்ட செயலக நீச்சல் பயிற்சியாளருமான தங்கத்துரை சோமஸ்காந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வி.ஈஸ்வரன், விளையாட்டு உத்தியோகத்தர்களான பிரசாத், சிவகுமார் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

வடகிழக்கு மாகாணத்தில் மாணவர்களுக்கு நீச்சல் பயிற்சியினை கல்லூரி அமைத்து வழங்கிவரும் ஒரேயொரு நீச்சல் பயிற்சி கல்லூரியாக இருந்து வருவகின்றது. சுகாதார வழிமுறைகளை கடைப்பிடித்து கல்லடி கடற்கரையில் ஆறு மாணவர்கள் ஒரு கிலோமீற்றர் நீந்திவந்து பார்வையாளர்களை பரவசப்படுத்தினார்கள்.

இந்த நீச்சல் நிகழ்வில் ஐ. கெல்வின் கிஷோர், கு. டான்ஸ்டித், என்.லிருக்க்ஷன், அரிமாத்துங்கன், கு. டான்ஸ்டின் மற்றும் கு. டான் பிரீடோ ஆகிய நீச்சல் வீரர்கள் கலந்துகொண்டனர்.

இலங்கையின் பெரும்பாலான பகுதிகள் நீரினால் சூழப்பட்டுள்ள நிலையில் ஒவ்வொருவரும் நீச்சல் தொடர்பான அறிவினைப் பெற்றிருக்கவேண்டும் என்பதற்கான தொடர்ச்சியான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாக மட்டக்களப்பு நீச்சல் கல்லூரியின் பொறுப்பாளரும் மட்டக்களப்பு மாவட்ட செயலக நீச்சல் பயிற்சியாளருமான தங்கத்துரை சோமஸ்காந்தன் தெரிவித்தார்.

# கல்முனையில் கரைவலை தோணிகளுக்கு அதிகளவான சூரை வகை மீன்கள்!



(எம் .என்.எம். அப்ராஸ்)

அம்பாறை மாவட்டம் கல்முனை கடற்பரப்பில் கரைவலை தோணிகளுக்கு அதிகளவான பாறைக்குட்டி வகைஇன மீன்கள் அதிகளவில் பிடிக்கப்பட்டன.

கடந்த சில நாட்களில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக இப் பகுதியில் கரைவலை

தோணிகளுக்கு மீன்பிடியானது மிகவும் குறைந்த நிலையில் காணப்பட்டதுடன் நீணட நாட்களின் பின்னர்கரைவலை மீனவர்களுக்கு இவ் வகை மீன்கள் இன்றைய தினம் அதிகளவில் பிடிக்கப்பட்டது இதனால் மீனவர்கள் மகிழ்ச்சி நிலையில் காணப்பட்டனர்.

இதேவேளை குறித்த மீன்பிடி நடவடிக்கையின் போது மீன்பிடி கடலில் காணப்படும் ஒரு வகைகடற்பாசிகள் மீனவர்களின் வலைக்குள் அதிகமாக மீன்களுடன் அகப்பட்டதனால் குறித்த கடற்பாசியினை அகற்றும் செயற்பாட்டில் மீனவர்கள் ஈடுபட்டனர் இதனால் மீனவர்கள் சிரமத்தை எதிர்நோக்கியதைஅவதானிக்க முடிந்தது.

குறித்த மீன்கள் உள்ளூர் சந்தையில் ஒரு கிலோ 300 ருபாவிற்கு விற்பனையாவதுடன்

மேலதிக மீனகள் வெளி மாவட்டங்களுக்கும் விற்பனைக்காக குளிரூட்டி வாகனம் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்ற இதே வேளை மேலும் இப் பிரதேசத்தில் மீன்கள்

கருவாட்டுக்காய்பதனிடப்படுகின்றமை குறிப்பிட்டத்தக்கது .

# கலை மன்றங்களுக்கான காசோலை வழங்கிவைப்பு





(ஏ. எல்.எம்.ஷினாஸ்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கலை மன்றங்களுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.வை. நௌஸானாவின் நெறிப்படுத்தலில் சம்மாந்துறை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் யு.எம்.அஸ்லம் தலைமையில் காசோலைகள் கலை மன்ற நிர்வாகிகளிடம் கையளிக்கப்பட்டன.

# அடிப்படைவசதியற்ற நிலையில் குடிசையில் வாழ்ந்த குடும்பத்திற்கு நிரந்தர வீடு!!





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மிகவும் வறிய நிலையில் எந்த அடிப்படைவசதியும் அற்ற நிலையில் குடிசையில் வாழ்ந்த குடும்பம் ஒன்றுக்கு வீடு ஒன்றினை கட்டிவழங்குவதற்கான ஏற்பாட்டினை சுவிஸ் உதயம் அமைப்பு முன்னெடுத்துள்ளது.

செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரடியன்குளம் பகுதியில் களிமண் வீட்டில் யானைகளின் அட்டகாசத்திற்கு மத்தியில் சிறுகுழந்தைகளுடன் வாழும் குடும்பத்திற்கே இந்த வீட்டினை கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சுவிஸ் உதயம் அமைப்பின் பிரதிநிதிகள் இப்பகுதியில் கள விஜயத்தினை மேற்கொண்டபோது குறித்த குடும்பத்தின் நிலைமை தொடர்பான தகவல்கள் பெறப்பட்டு அவை சுவிஸ் உதயம் அமைப்பின் தாய்ச்சங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

அதனை தொடர்ந்து சுவிஸ் உதயம் அமைப்பின் பொருளாளர் துரைநாயகத்தின் முயற்சியினால் சுமார் ஆறு இலட்சம் ரூபா செலவில் குறித்த வீட்டினை அமைத்துக்கொடுப்பதற்கான பணிகள் ஆரம்பித்துவைக்கப்பட்டன.

சுவிஸ் உதயம் அமைப்பின் கிழக்கு மாகாண கிளையின் மட்டக்களப்பு இணைப்பாளர் றொமிலா செங்கமலன் தலைமையில் இந்த வீட்டினை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நடைபெற்றது.

மூன்று குழந்தைகளுடன் கூலித்தொழில் செய்துவரும் குடும்பத்தினர் நீண்டகாலமாக களிமண் வீட்டில் வசித்து வந்த நிலையில் சுவிஸ் உதயம் அமைப்பின் ஊடாக அவர்களுக்கான வீடு அமைத்துக்கொடுக்க நடவடிக்கையெடுக்கப்பட்டதற்கு அப்பிரதேச மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.




# காத்தான்குடி ஜனாஸா நலன்புரி அமைப்புக்கு வாகனம் கையளிப்பு!!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

காத்தான்குடி ஜனாஸா நலன்புரி அமைப்புக்கு ஜனாஸாக்களை ஏற்றுவதற்கான வாகனம் வெள்ளிக்கிழமை கையளிக்கப்பட்டது.

இந்த வைபவம் காத்தான்குடி ஜனாஸா நலன்புரி அமைப்பின் அலுவலகத்தில் அதன் தலைவர் யு.எல்.எம்.றபீக் தலைமையில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் காத்தான்குடி நகரசபை தவிசாளர் எஸ்.எச்.அஸ்பர், குருக்கள்மடம் இராணுவ முகாம் அதிகாரி கெப்டன் என்.சி.அத்துக்கொரல, காத்தான்குடி ஜனாஸா நலன்புரி அமைப்பின் ஆலோசகர்களான எம்.எம்.ஜரூப், அஷ்ஷெய்க் எம்.சி.எம்.றிஸ்வான் மதனீ, காத்தான்குடி இமாஸா வர்த்தக நிறுவனத்தின் உரிமையாளர் எம்.அஜ்வத் மற்றும் நகர சபை உறுப்பினர்கள் பொலிஸ் அதிகாரி உட்பட ஜனாஸா நலன்புரி அமைப்பின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்த அமைப்பின் செயற்திட்டம் தொடர்பாக இதன் ஆலோசகர்களில் ஒருவரான அஷ்ஷெய்க் எம்.சி.எம். றிஸ்வான் மதனீ உரையாற்றினார்.

இதன்போது காத்தான்குடி ஜனாஸா நலன்புரி அமைப்பின் உறுப்பினர்கள் சேவையை பாராட்டி நினைவுச்சின்னம் மற்றும் சான்றிதழ் என்பனவும் வழங்கி வைக்கப்பட்டதுடன் ஜனாஸாக்களை ஏற்றுவதற்கான வாகனமும் கையளிக்கப்பட்டது. இவர்களின் இப் பணி மிகவும் பாராட்டுக்குரியதும் வரவேற்கத்தக்கதுமாகும்.



# மூதூர் சுகாதார வைத்திய அதிகாரியாக டாக்டர் ஹில்மி முகைதீன் பாவா நியமனம்



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

வருடாந்த இடமாற்றத்தை தொடர்ந்து கிண்ணியா தள வைத்தியசாலையில் இரத்த வங்கி பிரிவில் கடமைபுரிந்த டொக்டர் ஹில்மி முகைதீன் பாவா அவர்கள் மூதூர் சுகாதார வைத்திய அதிகாரியாக கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

முன்னர் சுகாதார வைத்திய அதிகாரியாக டொக்டர் என்.எம். எம்.ஹஸ்ஸாலி அவர்களின் வருடாந்த இடமாற்றத்தை தொடர்ந்து டொக்டர் ஹில்மி முகைதீன் பாவா தற்போது நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# விளாவூர் யுத்தம்முல்லைதீவினை வீழ்த்தி சம்பினானது காஞ்சிரங்குடா!!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)



மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குறப்பட்ட விளாவட்டவான் ராஜா விளையாட்டுக் கழகம் தனது 51 வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு நடாத்திய

உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் காஞ்சிரங்குடா ஜெகன் விளையாட்டு கழகம் சம்பியனாக மகுடம் சூடியுள்ளது.

வடக்கு கிழக்கில் 30 அணிகளை உள்ளடக்கியதாக கடந்த 22 ஆம் திகதி ஆரம்பமாகிய விலகல் முறையிலான குறித்த உதைபந்தாட்ட சுற்று போட்டியின் இறுதி நிகழ்வு ராஜா விளையாட்டுக்கழக தலைவர் த.தயாபரன் தலைமையில் இடம்பெற்றது.

பிற்பகல் இடம்பெற்ற அரையிறுதிச் சுற்றின் முதலாவது போட்டியில் சொறிக்கல்முனை சாந்தன் குருஸ் அணியினரும் காஞ்சிரங்குடா ஜெகன் அணியினர் மோதியிருந்தனர். குறித்த போட்டியில் தண்ட உதை மூலம் காஞ்சிரங்குடா ஜெகன் அணி வெற்றிபெற்று இறுதிச் சுற்றுக்குள் நுழைந்துள்ளது.

தொடர்ந்து இடம்பெற்ற அரையிறுதிச் சுற்றின் இரண்டாவது போட்டியில் முல்லைத்தீவு உதய சூரியன் அணியினரும் பண்டாரியாவெளி நாகர் அணியினரும் பலப்பரிச்சை நடத்தியிருதனர். இதில் தண்ட உதை மூலம் முல்லைத்தீவு உதய சூரியன் அணி வெற்றி பெற்று இறுதிச்சுற்றுக்கு முன்னேறியது.

தொடர்ந்து மூன்றாம் நான்காம் இடம்களை தீர்மாணிக்கும் போட்டி தண்ட உதை மூலமான போட்டியாக இடம்பெற்றது. குறித்த போட்டியில் பண்டாரியாவெளி நாகர் அணியினர் மூன்றாம் இடத்தினை பெற்றுக்கொள்ள சொறிக்கல்முனை சாந்தன் குருஸ் அணியினர் நான்காம் இடத்தினை பெற்றுக்கொண்டனர்.

அடுத்து விளாவூர் யுத்தம் என வர்ணிக்கப்படும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதி போட்டியில் முல்லைத்தீவு உதயசூரியன் அணியும் காஞ்சிரங்குடா ஜெகன் அணியும் மோதியிருந்தது, இதில் தண்ட உதை மூலம் காஞ்சிரங்குடா ஜெகன் அணி முதலாம் இடத்தினை பெற்றுக்கொள்ள இடண்டாம் இடத்தினை முல்லைத்தீவு உதயசூரியன் அணி பெற்றுக்கொண்டது. உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் சிறந்த வீரனாக முல்லைத்தீவு உதயசூரியன் அணி வீரர் எஸ்.ஆர்த்தியும், சிறந்த பின்கள வீரனாக முல்லைத்தீவு உதயசூரியன் அணி வீரர் எஸ்.அபியும் தெரிவு செய்யப்பட்ட அதே வேளை சிறந்த பந்துக் காப்பாளராக ஜெகன் அணியின் பந்து காப்பாளரும் தெரிவு செய்யட்டனர். இறுதியில் வெற்றிபெற்ற கழகங்களுக்கு வெற்றிக்கிண்ணம் மற்றும் பணப்பரிசும் வழங்கப்பட்டது.

இறுதிப்போட்டிக்கு பிரதம அதிதியாக கிராமிய, பாடசாலை விளையாளையாட்டு, உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் ரவீந்திர சமரவிக்ரம மற்றும் பொதுஜன பெரமுனவின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் பா.சந்திரகுமார் ஆகியோர் இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு வெற்றியாளர்களுக்கான பரிசுகளை வழங்கி வைத்தார்.

# மையவாடிக்கான வீதி அமைத்தல் நேரில் சென்று வாக்குறுதியளித்த உப தவிசாளர்

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை பட்டினம் சூழலும் பிரதேச சபைகுற்பட்ட பின்தங்கிய கிராமங்களில் ஒன்றான கப்பல்துறை முத்துநகர் கிராமத்தில் மைய்யவாடிக்கான போக்குவரத்து பாதை ஒன்றினை அமைப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பட்டினம் சூழலும் பிரதேச சபை உப தவிசாளர் ஏ.எல்.எம்.நௌபர் தெரிவித்தார் நேரில் சென்று பார்வையிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மிக நீண்ட காலமாக மையவாடிக்கு செல்வதற்கு வீதி ஒன்று இல்லாமையால் பொது மக்கள் பெரும் அசௌகரியான்களுக்கு உள்ளன நிலையில் ஜனாஸாக்களை தூக்கி செல்லும் போது மழை மழை காலங்களில் அப்பகுதிக்கு செல்ல முடியாத நிலை ஏட்படுவதாகவும் இவ் மைய்யவாடிக்கான வீதியினை அமைத்துத் தருமாறும் பள்ளிவாயல் நிர்வாகத்தினர், பிரதேச அபிவிருத்தி சங்கம் மற்றும் பொதுமக்களினால் முன்வைக்கபட்ட கோரிக்கைக்கு அமைவாக நேரில் சென்று பார்வையிட்டதுடன் இவ்விதியினை அமைத்து தருவதாக வாக்குறுதியினையும் வழங்கியிருந்தார்

மேலும் இந்நிகழ்வில் பட்டினம் சூழலும் பிரதேச சபை உப தவிசாளர் ஏ.எல்.எம்.நௌபர், பள்ளிவாயல் நிர்வாகத்தினர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch
Seela
Food
Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்க கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும் ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch
Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில் நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

# யானை மனிதன் மோதல் பரிதாபமாக உயிரிழக்கும் நிலையில் யானை ; சுட்டித்தனம் காட்டும் குட்டி யானை

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை - எத்தாபெந்தி வெவ பகுதியில் வாய்வெடி உட்கொண்ட யானை விழுந்த நிலையில் அதன் குட்டி யானை சோகத்தில் சுற்றி திரிவதை காணக்கூடியதாக இருக்கின்றது.

இச்சம்பவம் காலை இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் மொரவெவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட எத்தாபெந்திவெவ பகுதியில் கடந்த சில நாட்களாக வேட்டையாடுவதற்கு பயன்படுத்தப்பட்டு வரும் வாய் வெடிகளை பயன்படுத்தி வேட்டையாடும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆனாலும் பன்றி, மான், மறைகள் போன்றவற்றை வேட்டையாடுவதற்காக வாய் வெடிகளை பயன்படுத்தி வருவதாகவும் இதனை யானைகளும் உட்கொண்டு வருவதாகவும் வனஜீவராசிகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இருந்தபோதிலும் வாய் வெடிகளை உட் கொண்ட யானையே வாயில் பலத்த காயங்களுடன் இவ்வாறு விழுந்து கிடப்பதாகவும் வனஜீவராசிகள் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கையில் வாய்வெடிகளை உட்கொண்டு அதிக அளவில் உயிரிழந்த மாவட்டமாக திருகோணமலை மாவட்டம் இனங் காணப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

மேலும் தற்போது சேனைப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வரும் மக்கள் தமது விவசாய நிலங்களை பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் ஹக்கபடஸ் என்றழக்கப்படும் வாய் வெடிகளை பயன்படுத்தி வருவதினால் இந்த கால கட்டத்தில் அதிகளவிலான யானைகள் உயிரிழப்பதாகவும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சியாக மக்கள் இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டு வந்தால் சட்ட நடவடிக்கை எடுத்து சட்டத்தின் முன் நிறுதுதி நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் மொரவெவ பிரதேசத்திற்கு பொறுப்பான வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரி ஒருவர் மேலும் தெரிவித்தார்.

# கொட்டும் மழைக்கு மத்தியிலும் மாணவர்கள் ஆர்வத்துடன் பாடசாலைக்கு வருகை

(வி.ரி.சகாதேவராஜா)



அம்பாறை மாவட்டத்தில் கொட்டும் மழைக்கு மத்தியில் அரச பாடசாலைகள் நேற்று (26) செவ்வாயக்கிழமை இரண்டாவது நாளாகவும் திறக்கப்பட்டு சீராக இயங்கிவருகின்றன.

கொரோனா நீண்ட விடுமுறையின்பின்பு கிழக்கில் நேற்றுமுன்தினம் (25) திங்கட்கிழமை ஆரம்பவகுப்புகள் உள்ள சகல பாடசாலைகளும் மீண்டும் திறக்கப்பட்டன .

கல்விஅதிகாரிகள் பாடசாலைகளுக்கு விஜயம்செய்து கண்காணிப்பிலீடுபட்டதுடன் வரவு அறிக்கைகளுடன் செவ்வை பார்த்தல் பட்டியலையும் பூர்த்திசெய்து அறிக்கைசெய்தனர்.

அதேவேளை பொலிசாரும் சகல பாடசாலைகளுக்கும் சென்று காலை முதலே கண்காணிப்பிலீடுபட்டதுடன் வரவு அறிக்கைகளையும் பெற்றுக்கொண்டனர்.

மாணவர் வரவு அதிபர் வரவு ஆசிரியர் வரவு கல்விசாரா ஊழியர்களின் வரவு என்பன முக்கியமாகக்கவனிக்கப்பட்டன.

மாணவர்களும் ஆசிரியர்களும் ஆர்வத்தோடு வருகைதந்திருந்தனர். வகுப்பறையில் சிலரும்வெளியேயும் அநாயாசமாக மாணவர்கள் திரிந்தனர்.ஆசிரியர்களும் அவ்வாறே தத்தமது கருமங்களில் ஈடுபட்டனர்.

கிழக்கிலுள்ள 13வலயங்களிலும் பாடசாலைகள் திறக்கப்பட்டன என்று கிழக்குமாகாணகல்விப்பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் அறிவித்துள்ளார்.நேற்று அவர் சகல வலயக்கல்விப்பணிப்பாளர்களின் அறிக்கைகளைப் பெற்று இதனைக்குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் 200மாணவர்களுக்கு குறைந்த ஆரம்பவகுப்புக்களைக் கொண்ட 568பாடசாலைகள் ஏலவே கடந்த வியாழக்கிழமை மீளத்திறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நானாட்டான் பிரதேச சபையின் புதிய உறுப்பினராக பெனடிற் யக்கோப்பிள்ளை நியமனம்



(வாஸ் கூஞ்ஞ)

நானாட்டான் பிரதேச சபை புதிய உறுப்பினராக பெனடிக்ற் யக்கோப்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார். ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியின் உறுப்பினராக இருந்து இயற்கை எய்திய நாகூர் மீரா ராசிக் பரீது இடத்துக்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த நானாட்டான் பிரதேச சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி சார்பில் போட்டியிட்டு உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட நாகூர் மீரா ராசிக் பரீது அவர்கள் இயற்கை எய்தியதைத் தொடர்ந்து வெற்றிடமாக இருந்த நானாட்டான் பிரதேச சபையின் உறுப்பினர் பதவிக்கு மன்னார் நானாட்டான் பிரதேசத்தில் கற்கிடந்த குளம் கிராமத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட்ட திரு பெனடிற் யக்கோப்பிள்ளை அவர்கள் நானாட்டான் பிரதேச சபைக்குரிய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் புதிய உறுப்பினராக மன்னார் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் விமல ரூபன் அவர்களால் 05-10-2021 நியமிக்கப்பட்டுள்ளார்

அதற்குரிய வர்த்தமானி அறிவித்தல் நானாட்டான் பிரதேச சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நானாட்டான் பிரதேச சபையின் புதிய உறுப்பினராக பெனடிற் யக்கோப்பிள்ளை அவர்கள் சட்டத்தரணி மகேந்திரன் ரூபன் முன்னிலையில் சத்திய பிரமாணம் செய்து கொண்டதைத் தொடர்ந்து திங்கள் கிழமை (25.10.2021) அன்று நானாட்டான் பிரதேச சபையின் 44 வது கூட்டத் தொடரில் பங்கேற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு றோயல் கல்லூரி மாணவன் ஹனீப் அஹமட் பேச்சு போட்டியில் மூன்றாமிடம்

(நிந்தவூர் நிருபர்)



முஸ்லிம் சமய மற்றும் கலாச்சார விவகாரங்கள் திணைக்களம் இவ்வருடம் நடாத்திய தேசிய மீலாத் தின போட்டியில் அம்பாறை மாவட்டம் நிந்தவூரைப் பிறப்பிடமாகக் கொண்ட கொழும்பு ரோயல் கல்லூரியில் தரம்-07 ல் கல்வி கற்கின்ற அப்துல் கபூர் ஹனீப் அஹமட் ஆங்கில பேச்சு போட்டியில் (இடை நிலைப் பிரிவில்) பங்குபற்றி மூன்றாம் இடத்தை பெற்றுள்ளார்.

இவர் கடந்த 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற மாகாணமட்ட தேசிய மீலாத் தின போட்டியில் கனிஷ்ட பிரிவில் பங்குபற்றி ஆங்கில பேச்சுப் போட்டியில் முறையே மூன்றாம் மற்றும் இரண்டாம் இடங்களை பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. இவர் பாடவிதான மற்றும் இடைப்பாடவிதான செயற்பாடுகளில் மிக ஆர்வத்துடன் பங்குபற்றி பல வெற்றிகளைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக இம்மாணவன் அதான், கிராஅத், குர்ஆன் மனனமிடல், தேசிய மீலாத் தின ஆங்கில பேச்சு போட்டி, கல்வியமைச்சின் ஆங்கில தினப் போட்டி, நாடகம், விளையாட்டு, நடனம், Rubeek's Cube மற்றும் சித்திரம் போன்ற இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மிக ஆர்வத்துடன் பங்குபற்றி பல்வேறு சாதனைகளை புரிந்துள்ளதமை குறிப்பிடத்தக்கது. இம் மாணவன் பாடசாலை, கோட்ட, வலய மற்றும் மாகாண மட்டத்தில் பல சிறந்த அடைவுகளை பெற்றுள்ளதோடு இம்முறை நடைபெற்ற தேசிய மட்ட மீலாத் நபி தின போட்டியில் பங்கு பற்றி ஆங்கில பேச்சுப் போட்டியில் தேசிய ரீதியில் மூன்றாம் இடம் பெற்றிருப்பதன் மூலம் தேசிய ரீதியில் சாதனை படைத்த பெருமையை தனதாக்கிக் கொண்டுள்ளார்.

மேலும் இம் மாணவன் 2021 ம் ஆண்டு கொழும்பு றோயல் கல்லூரி நடாத்திய பாடசாலை மட்ட வருடாந்த இஸ்லாமிய தினப் போட்டியில் பங்குபற்றி ஆங்கில பேச்சுப் போட்டியில் இரண்டாம் இடத்தையும் குர்ஆன் மனனம் இடுதல் போட்டியில் மூன்றாம் இடத்தையும் பெற்றமையும் இவரின் சாதனைகளுக்கு சான்றாகும்.இவர் நிந்தவூர் சீ.ஓ. லெஸ்தகீர் சர்வதேச பாடசாலை மற்றும் கமு/கமு / அஸ்-ஸபா வித்தியாலயம் என்பனவற்றில் தனது ஆரம்பக் கல்வியை பெற்றதோடு மட்டுமல்லாமல் 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் உயர் புள்ளி பெற்று சிறப்பு சித்தி பெற்றமையால் கொழும்பு டீ.எஸ். சேனநாயக்கா கல்லூரியில் கல்வி பயின்று தற்சமயம் கொழும்பு றோயல் கல்லூரியில் தரம்-07 ல் கல்வி கற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# TRINCO வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் பெற்றுக்கொள்ளும் வேலைத்திட்டம் மூதூரில்



ஹஸ்பர் ஏ ஹலீம்

2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் பெற்றுக் கொள்ளும் வேலைத்திட்டத்தின் கீழ் மூதூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் பெற்றுக் கொள்ளும் நிகழ்வு நேற்று (25) மூதூர் பிரதேச செயலகத்தில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக் குழு தலைவருமாகிய கபில நுவன் அத்துகோரல தலைமையில் நடைபெற்றது.



எதிர்வரும் 2022ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தினூடாக கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான பல திட்டங்கள் ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் அதன் மூலமாக கிராம மக்களுடைய வருமானத்தை அதிகரிக்க கூடிய சந்தர்ப்பம் காணப்படுவதாக இதன் போது பாராளுமன்ற உறுப்பினர் கபில அத்துகோரல தெரிவித்தார்.

உற்பத்திசார் விடயங்களுக்கு கூடிய கவனம் செலுத்தப்படுவதுடன் அவற்றுக்கான நிதி உதவிகள் உட்பட ஏனைய உதவிகளையும் தாம் வழங்க தயாராக இருப்பதாகவும் நிதியமைச்சர் இது தொடர்பில் கூடிய அக்கறையுடன் செயற்பட்டு வருவதாகவும் அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டம் பல இயற்கை வளங்களை கொண்டமைந்த மாவட்டமாக காணப்படுகின்றது. எனவே மாவட்ட அபிவிருத்தி மூலம் மக்களுக்கு பிரதிபலன் கிடைக்கக்கூடிய வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது காலத்தின் தேவையாக காணப்படுகின்றது. எதிர்வரும் வருடத்தில் திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக்கு 1574 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட இருக்கிறது.

இதற்கு மேலதிகமாக இன்னும் பல நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறலாம். எனவே கிராமிய மக்களுடைய தேவைகளை இனங்கண்டு அவரிடமிருந்து முன்மொழிவுகளை பெற்று அவற்றை நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக இதன்போது மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள தெரிவித்தார்.

தற்போது அரசாங்கம் உற்பத்தி சார் விடயங்களை மேம்படுத்துவதற்கு பல்வகையான செயற்பாடுகளை கிராமிய மட்டத்தில் மேற்கொண்டு வருகின்றது. இவற்றின் மூலமாக உற்பத்தி செயற்பாடு அதிகரிக்கப்படுவதுடன் மக்களின் வாழ்வாதாரமும் மேம்படக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுகின்றது. வறுமையை ஒழிக்கும் நோக்கத்தை கொண்டதாகவும் காணப்படுகின்றது.

அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை யதார்த்த பூர்வமாக்கும் நோக்கில் பல விடயங்கள் தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. நிதியமைச்சர் அவர்கள் கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்த தேவையான நிதி உதவி உட்பட ஏனைய உதவிகளை வழங்குவதற்கு தயாராக இருப்பதாகவும் அதன் ஒரு அங்கமாக இந்த வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் இதன்போது அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

மேலும் இந்நிகழ்வின் போது மீள்குடியேறிய மக்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான காசோலை பத்திரங்கள், உள்ளூர் உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கில் பயறு, உளுந்து ஆகிய விதைப்பக்கற்றுக்கள் இதன்போது மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில அத்துகோரலவால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டது.அத்துடன் சௌபாக்கியா உற்பத்தி கிராம வேலைத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான பயனாளி தெரிவு சான்றிதழும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டமை விஷேட அம்சமாகும்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர்களான நிமல் காமினி ஹேவாவிதாரண, ஆரியவதி கலபதி, மூதூர் பிரதேச செயலாளர் எம் .பி .எம் .முபாரக், அரசியல் பிரமுகர்கள், அரச அதிகாரிகள், கிராம முன்னேற்றச் சங்கம் மற்றும் ஏனைய சங்கத்தின் உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



(எஸ்.சபேசன்)

# பட்டிருப்பு கல்வி வலயத்தின் கீழ் உள்ள பாடசாலைகளுக்கு கையேடு வழங்கி வைப்பு

எருவில் கல்வி சமூக அபிவிருத்தி ஒன்றியத்தினால் (எஸ்டா ); பட்டிருப்பு கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் க .பொ .த (உ ஃத) பரீட்சையில் வரலாறு பாடத்துக்கு தோற்றும் மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கையேடு வழங்கி வைக்கும் நிகழ்வு அமைப்பின் ஸ்தாபகத் தலைவரும் சமூகசேவகருமான அ.வசிகரன் அவர்களின் ஒழுங்கமைப்பிலும் உதவிக்கல்விப்பணிப்பாளர் சுரேஸ் தலைமையில் வழங்கிவைக்கும் நிகழ்வு திங்கட்கிழமை இடம்பெற்றது.

அ.வசிகரன் அவர்களின் முயற்சியினால் எருவில் கல்வி சமூக அபிவிருத்தி ஒன்றியம் (எஸ்டா ) உருவாக்கப்பட்டு கல்வி சமூக பொருளாதாரம் போன்ற வளர்ச்சிக்காக பல இலட்சம் ரூபா பணம் செலவுசெய்யப்பட்டு இருப்பதுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு தொடர்ச்சியான சேவையினை இவ் அமைப்பு செய்து வருகின்றது. இதன் ஒரு அங்கமாகவே பட்டிருப்பு வலயத்தில் 40000 ரூபா நிதி பங்களிப்பில் இவ் உதவி வழங்கிவைக்கப்பட்டது

இந் நிகழ்வில் பட்டிருப்பு கல்வி வலயத்தின் நிருவாக பிரிவுக்கு பொறுப்பான பிரதிக்கல்வி பணிப்பாளர் எஸ் .மகேந்திரகுமார் அமைப்பின் ஸ்தாபகத் தலைவரும் சமூகசேவகருமான அ.வசிகரன் ,அமைப்பின் செயலாளர் இ.ஜீவராஜ் மற்றும் இ பட்டிருப்பு கல்வி வலய ஆசிரிய வள நிலைய முகாமையாளர் இசமூக விஞ்ஞான பாடத் துறை சார்ந்த ஆசிரிய ஆலோசகர்கள் இஎஸ்டா அமைப்பின் ஆலோசகர்கள் உறுப்பினர்கள் பட்டிருப்பு கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளின் வரலாறு பாட ஆசிரியர்கள் கலந்து சிறப்பித்தனர் .





# உதயபுரியில் வறிய குடும்பத்திற்கு வீடு..!

(அ . அச்சுதன்)

சுவிட்சர்லந்து பேர்ன் மாவட்டம் மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர்பீடம் கல்வி சமூகநலம் பண்பாடு அறப்பணி மையத்தினால் திருகோணமலை செல்வநாயகபுரம் உதயபுரியில் வீடு அற்ற ஒரு குடும்பத்திற்கு வீட்டிற்கான அங்குரார்ப்பண பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இவ்வீட்டிகான ஆரம்பக்கட்ட பணிகள் மையத்தின் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் ஆசிரியர் ச.திருச்செந்தூரன் தலைமையில் இடம்பெற்றது.




# பங்களாதேஷில் இந்துக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை கண்டித்து இந்து ஆலையங்களுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம்

## இந்து நிறுவனங்களின் கூட்டமைப்பு அறைகூவல்



(வவுணதீவு எஸ்.சதீஸ்)

நவராத்திரி தினத்தன்று பங்களாதேஷில் இஸ்லாமிய பயங்கரவாதிகளால் இந்து ஆலையங்கள், தாக்கப்பட்டு இந்துக்களின் வீடுகள், கடைகள் தீக்கிரையாக்கப்பட்டு இந்து துறவி உட்பட பலர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்தும் உயிர்நீத்த உறவுகளின் ஆத்மசாந்தி வேண்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை நாட்டிலுள்ள இந்து ஆலையங்களல்; ஆத்மசாந்தி வேண்டி பிராத்தனையும் கண்டித்து ஆர்ப்பாட்டமும் இடம்பெறவுள்ளதாக இந்து அமைப்புக்கள் இந்து ஆலையங்கள், இந்து நிறுவனங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் சி.வரதநிரோசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கல்லடியிலுள்ள திருச்செந்தூர் முருகன் ஆலைய மண்டபத்தில் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பங்களாதேசில் 2013 ம் ஆண்டில் இருந்து இதுவரை 3 ஆயிரத்து 680 தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளது. இந்த நிலையில் நவராத்திரி தினத்திலே இந்துக்களுக்கு எதிராக இஸ்லாமிய மதவெறியாளர்களால் கொலை வெறி தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலில் சுவாமி நிதிதாஸ் பிரபு உட்பட 11 பேர் படுகொலை செய்யப்பட்டதுடன். 550 வீடுகள், 442 கடைகள், தீக்கிரையாக்கப்பட்டுள்ளதுடன் 861 பேர் படுகாயமடைந்துள்ளதுடன் பல பெண்கள் மாபங்கப்படுத்தப்பட்டதுடன் 1608 இந்து மற்றும் பௌத்த விகாரைகள். இராமகிருஷ்ண மிஷன், உட்பட வணக்கஸ்தலங்கள் உட்பட 51 அம்மன் சக்தி பீடங்களில் இரண்டான தாட்சாயினுடைய 50 வது சக்தி பீடமான அவரது வலதுகை வீழ்ந்த இடம் , நாக்கு வீழ்ந்த இடமான இரு சக்தி பீடகள் தாக்கப்பட்டுள்ளது

இவ்வாறு இந்த நவராத்திரி தினத்தில் இஸ்லாமிய பயங்கரவாதிகளின் இந்த கொலைவெறி தாக்குதலை இலங்கை வாழ் இந்துக்கள் இந்து அமைப்புக்கள் இந்து ஆலையங்கள், இந்து நிறுவனங்கள் கூட்டமைப்பாக இதற்கு கடும் கண்டனம் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதேவேளை இவ்வாறனா இந்துக்களுக்கு எதிராக இம்பெற்ற இந்த தாக்குதலை கண்டித்தும் அந்த தாக்குதலில் உயிர் நீத்த எமது உறவுகளுக்கு எதிர்வரும் 29 ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு ஆத்மசாந்தி வேண்டியும்கனவயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் நாடளவிய ரீதியில் ஆலையங்களுக்கு முன்னால் ஈடுபட இந்து ஆலையங்கள் இந்து அமைப்புக்கள் நிறுவனங்களின் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

இத் தாக்குதலை கண்டிக்கும் முகமாக அன்றைய தினம் இந்த இஸ்லாமிய பயங்கரவாதத்திற்கு எதிராக ஒருமித்து குரல் கொடுக்க அன்றை தினம் நாட்டிலுள்ள இந்து ஆலையங்களுக்கு முன்னால் அகழ்விழக்கு ஏற்றி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவேண்டும் என தெரிவித்தார்.

# நஞ்சற்ற வீட்டுத்தோட்ட விவசாயத்திற்கு நிதியுதவி: கபில நுவன் அத்துகோரள



(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் நஞ்சற்ற வீட்டுத்தோட்ட பயிர்களை பயிரிடும் விவசாயிகளுக்கு கிணறு அமைப்பதற்கான நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குச்சவெளி கமநல சேவைகள் நிலையத்தில் திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கபில நுவன் அத்துகோரள அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.இவ் நிதியுதவியானது உலக வங்கியினால் வழங்கபடுவதுடன் திருகோணமலை மாவட்டத்தின் நஞ்சற்ற வீட்டு தோட்ட விவசாய தோட்டத்திற்கான கிணறுகளை அமைப்பதற்காக வழங்கப்படுவதுடன் மாவட்டத்தில் மொத்தம் நூறு கிணறுகள் அமைப்பதட்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

மேலும் குச்சவெளி பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 14 நஞ்சற்ற வீட்டுத்தோட்ட விவசாயிகளுக்கு கிணறுகள் அமைப்பதட்க்கு மூன்று இலட்சம் பெறுமதியான நிதியுதவி வழங்கபட்டத்துடன் இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கபில நுவன் அத்துகோரள,குச்சவெளி பிரதேசசெயலாளர் மட்டும் குச்சவெளி கமநல சேவைகள் நிலைய அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விசேட தேவையுடைய குடும்பம் ஒன்றுக்கு நிரந்தர வீடு கையளிப்பு





(ஹஸ்பர் ஏ ஹலீம்)

வாழ்வதற்கான இல்லறம் செயற்றிட்டத்தின் கீழ் மற்றொரு நிரந்தர வீடு வன்னி ஹோப் அவுஸ்ரேலியா நிறுவனத்தின் அனுசரணையில் திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தினால் நேற்று குச்சவெளிப் பிரதேசத்தில் திறந்து வைக்கப்பட்டு அவை பயனாளியிடம் கையளிக்கப்பட்டது.

வன்னி ஹோப் நிறுவனமும் மக்கள் சேவை மன்றமும் இணைந்து ஓலைக் குடிசை மற்றும் தகரக் கொட்டில்களில் நீண்டகாலமாக பெரும் அசௌகரியங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் குடும்பங்களின் வறுமை நிலமைகளை கருத்திற் கொண்டு அவர்களுக்கு நிரந்தர வீடுகளை நிர்மாணித்து வழங்கி வருகின்றது. இந்த உதவித் திட்டத்தின் கீழ் மேற்படி வீடு நிர்மாணித்து குறித்த பயனாளிக்கு கையளிக்கப்பட்டது.

சுமார் மூன்று இலட்சம் பெறுமதி கொண்ட இந்த வீட்டின் நிர்மாணிப்பு பணிக்காக அவுஸ்ரேலியா- சிட்டியினில் வசிக்கின்ற திரு. நாராயணநசுவாமி அவர்களினால் அவரது மனைவி காலங்சென்ற திருமதி. சிவசாந்தி நாராயணசுவாமி அவர்களின் ஞாபகார்த்தமாக அன்புளிப்புச் செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# காரைதீவில் பைசர் தடுப்பூசியை பெற மாணவர்கள் ஆர்வம்!



(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு பிரதேசத்திற்குட்பட்ட பாடசாலைகளில் இம்முறை க.பொ.த.சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான பைசர் ரக தடுப்பூசி நேற்று (25) திங்கட்கிழமை வெற்றிகரமாக ஏற்றப்பட்டதாக காரைதீவுப் பிரதேச சுகாதாரவைத்திய அதிகாரி டாக்டர்தஸ்லிமா பஷீர் தெரிவித்தார்.

காரைதீவுக்கோட்டத்திலுள்ள காரைதீவு விபுலாநந்த தேசிய கல்லூரி மற்றும்இ.கி.மி.பெண்கள் பாடசாலையில் இன்று காலைவேளையிலும் காரைதீவு சண்முகா மகாவித்தியாலயம் மாவடிப்பள்ளி அல்அஷ்ரப் மகாவித்தியாலயத்தில் பிற்பகல் வேளையிலும் 16வயது மற்றும் 17வயதுக்குட்பட்ட மாணவர்களுக்காக இத்தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.

மாணவர்கள் ஆர்வத்தோடு கலந்து கொண்டனர்.

காரைதீவுப்பிரதேசத்தில் பிரதேச சுகாதாரவைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஷீர் தலைமையில் இடம் பெறவிருக்கும் இவ்வேலைத்திட்டத்தில் சுமார் 220 மாணவர்கள் இத்தடுப்பூசிகளைப்பெற்றனர்.

இதேவேளை உயர்தர மாணவர்களுக்கான பைசர் ரக தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் கடந் 3தினங்களாக நடைபெற்றுவந்தது.இதுவரை 300மாணவர்கள் இதனைப்பெற்றுள்ளார்கள் என வைத்தியஅதிகாரி தஸ்லிமா பஷீர் மேலும் தெரிவித்தார்.

18-19வயதுக்குட்பட்ட உயர்தர மாணவர்களுக்கான இத்தடுப்பூசிகள் காரைதீவு விபுலாநந்த தேசிய கல்லூரி காரைதீவு சண்முகா மகாவித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளிலும் காலை 8மணிமுதல் மாலை 4மணி வரை ஏற்றப்பட்டது.

இந்த இருதினங்களிலும் ஏற்றத்தவறிய மாணவர்களுக்கு கடந்த சனிக்கிழமை(23) காரைதீவு சுகாதார வைத்தியஅதிகாரி பணிமனையில் ஏற்றப்பட்டது.

# சம்மாந்துறை பிரதேச சபை வரவு-செலவுத் திட்டம் தயாரிப்பதற்கான துறைசார் நிபுணர்களின் ஆலோசனை கூட்டம்



(மாளிகைக்காடு நிருபர் )

சம்மாந்துறை பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தினை மக்கள் பங்களிப்புடனான வரவு செலவுத்திட்டமாக தயாரிப்பதற்கான துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகளையும், கருத்துகளையும் பெறும் கலந்துரையாடல் ஜனாதிபதி விளையாட்டுக் கட்டிடத் தொகுதி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேசசபை தவிசாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எம்.முஹம்மட் நௌஸாத் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் துறைசார் நிபுணர்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களின் கருத்துக்களும் ஆலோசனைகளும் பெறப்பட்டது. இந்த கலந்துரையாடலில் சம்மாந்துறை பிரதேச சபை உப தவிசாளர் ஏ.அச்சு முஹம்மட், சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட், சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக புலனாய்வு உத்தியோகத்தர். எம்.எம்.எம்.றிஸ்வி சம்மாந்துறை பிரதேச சபையின் நிதி உதவியாளர் ஏ.ஜே.எம்.ஜெஸீல், துறைசார் நிபுணர்கள், சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள், நிதிப் பிரிவு உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



# இந்த அரசாங்கம் ஜோக் அடிக்கின்றது - வடிவேல் சுரேஸ் தெரிவிப்பு



(க.கிஷாந்தன்)

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான அடக்குமுறை தொடர்ந்தால், கைதுகள் நீடித்தால் வடிவேல் சுரேஸின் நடவடிக்கையும் இனி வித்தியாசமாகவே இருக்கும் என்பதை எச்சரிக்கையுடன் கூறிவைக்க விரும்புகின்றேன்- என்று இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

பெருந்தோட்டக் கம்பனிகளின் அடாவடியால் பாதிக்கப்பட்டுள்ள மலையக பெருந்தோட்ட மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் தொடர்ச்சியாக அதிகரிக்கப்படுவது பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. மக்கள் வறுமையின் பிடிக்குள் சிக்கிவிடுவார்களோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

நிலைமை இவ்வாறிருக்கையில் அரசாங்கம் தூங்கிக்கொண்டிருக்கின்றது. மக்களை காக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய தருணத்தில் நகைச்சுவை பேசிக்கொண்டிருக்கின்றது. பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தால்கூட மாணவர்களின் தேவைகளை பூர்த்திசெய்யமுடியாத நிலையில் பெற்றோர் உள்ளனர்.

அதேவேளை, பெருந்தோட்டப்பகுதிகளிலுள்ள காணிகள் அபகரிக்கப்படுகின்றன. தொழிற்சங்கப் பிரச்சினைகள் பொலிஸ்நிலையம்வரை கொண்டுசெல்லப்படுகின்றன. எமது மக்கள் இவ்வாறு பாதிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது. எமது பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. மலையக மக்களை புறக்கணிப்பதை கண்டிக்கின்றோம். ஏனைய மக்களுக்கு வழங்கப்படும் அனைத்து சலுகைகளும் எமது மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

அரசாங்கத்தின் நிவாரணம் மலையக மக்களுக்கு வழங்கப்படுவதில்லை. ஆயிரம் ரூபா சம்பளத்திலும் ஏமாற்று நாடகம் தொடர்கின்றது. தொழிற்சங்கம் மற்றும் அரசியலுக்கு அப்பால் மக்களுக்காக வீதியில் இறங்குவதற்கு நாம் தயார். மக்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு இருக்கின்றது. என்றார்.

நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com

SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59

"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமுகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206

கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்



வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK

| | |
|---|---|
| துரித வேகம். | London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service |
| உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. | All Countries |
| பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. | 100% Insured |
| 365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. | 365 Days 24 Hours Service |
| உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். | Door to Door Delivery |
| இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. | Online Tracking System |
| சிறந்த பொதியாக்கம். | Quality Packing |

நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன் உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள் அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதியான பரிசில்கள் மற்றும் அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு விசேட விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பொதிகளையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


உதயகுமார் கல்வி நிலையம்



முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com

SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன் 0.62% தொடக்கம்
10% இல் சொந்த வீடு கட்ட அல்லது வாங்க
- இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க, விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்

இலங்கையில் வீடுகள், காணிகள், விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே » பயணக்காப்புறுதி
» ஆயுட்காப்புறுதி » சட்டக் காப்புறுதி



Restaurant
GRÜNAU
ITALY INDIAN THAI SRILANKA
Meier-Wiesen Str. 58
8064 Zürich
PIZZA NACH WAHL, TANDOORI, FISCH SPL.
BBQ GRILL, BIRIYANI SPL., CURRY GERICHTE,
PARTYSERVICE.
Bestellung Number
044 260 2222
079 563 2222
www.restaurant-grunau.ch
info@restaurant-grunau.ch
Uber Eats
VISA TWINT

# MATHE BILDUNGSZENTRUM

# கணித கற்கைநெறி மையம்

MBZ

## கல்வியே துணை

பள்ளித் தலைமனைத்தும்
பேரெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா -வின் தெளிவான
கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN

076 431 83 79

mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல

**Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung**
**BMS, HMS, FMS, Gymi Probe**

அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்

**Oerlikon, Uster, Schaffhausen**